## ஹாரிஸ்பதுவ பிரதேச சபை - 2024

-----------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹாரிஸ்பதுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹாரிஸ்பதுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வலப்பனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் 05 சபை கட்டிடங்கள் மேம்படுத்தும் செலவினர்களின் மொத்தம் ரூபா 1,359,760 குறைத்து மூலதனமாக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதாக. | சரியாக கணக்கால் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 2,736,536 ஆன இயந்திர உபகரணங்கள் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பெக்கோ இயந்திரத்தில் மதிப்பிடப்பட்ட திருத்தச் செலவினம் ரூபா 957,626 ஆக இருந்த போதும் அது ரூபா 1,500,000 என கடன் கொடுத்தோராக காட்டப்பட்டமையால் கடன் கொடுத்தோர் ரூபா 542,374 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் ஜூலை - திசெம்பர் காலப்பகுதிக்காக பெற வேண்டிய ரூபா 2,683,286 ஆன நீதிமன்ற தண்ட பண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதாக. | சரியாக கணக்கால் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படும் மொத்தம் ரூபா 2,169,145 ஆன 05 சொத்து மீதிகளுக்குரிய பதிவேடுகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | கணிப்பீடு பரிந்துரைகளை செயல்படுத்துவதாகவும் இது எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகள் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் சரியாக அட்டவணைகள் பராமரித்துச் செல்லப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் கட்டளைச் சட்டம்** | | | |
| | 20 ஆம் பிரிவு | வீதவரி ஆதனங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டிற்கான வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | காலரீதியாக ஆதனங்கள் மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | **1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| | 59 ஆம் விதி | ஒவ்வொரு ஆண்டு மார்ச் 31 இல் உள்ளவாறு முன்னுள்ள வியாபார அனுமதிப் பத்திரங்கள் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணிப்பீடு மேற்கொள்வதாக வியாபார. | அனுமதி பத்திரங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு கட்டணங்கள் அதைவிட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,577,837 ஆக

இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 59,463,301 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | - ரூபா | - ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,519,592 | 10,971,661 | 11,572,815 | 13,805,102 | 10,139,600 | 10,579,520 | 5,321,675 | 14,406,255 |
| (ii) | வாடகை | 2,083,200 | 2,182,940 | 2,132,390 | 131,500 | 1,434,000 | 1,434,500 | 1,421,500 | 80,950 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,200,000 | 3,800,251 | 3,737,651 | 189,070 | 1,782,260 | 706,800 | 706,800 | 126,470 |
| (iv) | ஏனைய வருமானம் | 55,719,250 | 72,879,475 | 164,218,087 | 63,247,988 | 56,547,785 | 51,579,737 | 4,079,737 | 154,586,600 |
| | | 70,522,042 | 89,834,327 | 181,660,943 | 77,373,660 | 69,903,645 | 64,300,557 | 11,529,712 | 169,200,275 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

**சபையின் வருமன சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 13,805,102 ஆக இருந்தது. அதில் ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 10,000 இணை மிகைத்த 114 ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 2,045,155 ஆன நிலுவை மீதியொன்றாக இருந்தது. | ஆதனங்களை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | சபையில் வீதவரி பதிவேட்டின் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தில் காணிகளாக குறிப்பிடப்பட்டு ரூபா 100 வீதம் அறவிடப்பட்ட 68 ஆதனங்களில் கட்டிடங்கள் நிர்மாணித்து குடியிருப்புக்காக பயன்படுத்தப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது இக்கட்டிடங்கள் அனுமதி இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான எந்த ஒரு நடைமுறையும் பின்பற்றப்பட்டு இருக்கவில்லை அவ்வாறே கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்குரிய | எதிர்காலத்தில் அறவிடுவதாக. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து ஆதனங்கள் மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | | |

**(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 60,904,874 ஆக இருந்தது. 2016 – 2019 காலப்பகுதிக்குரிய மீதி ரூபா 23,189,228 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளில் மீண்டெழும் வருமானத்தை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தாமல் ரூபா 196,073,474 கூட்டுத்தொகையான பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மிகை பணத்தை வைப்பாக முதலீடு செய்வதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் எடுப்பதாகவும். | மிகை பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் ஹேதெணி நகரில் அமைந்துள்ள கெட்டன்கும்புற காணியில் இலங்கை மின்சார சபையின் மின்சார விநியோக நிலையமொன்று அமைக்கப்பட்டு இருந்ததுடன் அக்காணியின் உரித்தை தீர்வு செய்யாமல் சபையால் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 2,386,253 தொகை செலவிடப்பட்டு காணியை சுற்றி மதில் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. அத்தோடு 2024 - 2025 ஆம் ஆண்டுகளின் போது உரிய காணியில் பல்நோக்கு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக ரூபா 202,768 தொகை செலவிடப்பட்டு இருந்தது. | நகர அதிகார சபைக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை தீர்வு செய்யப்பட்டதன் பின்னர் அவற்றை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்த வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையால் 2014 ஆம் ஆண்டின் போது மெதவல விளையாட்டரங்கு அமைந்துள்ள காணியின் பௌதீக உடைமை சபைக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் அக்கானின் உரித்தை ஏற்பதற்காக 09 ஆண்டு கால பகுதியில் கையேற்றல் கட்டணங்கள், நிர்வாக செலவினம் இழப்பீட்டு கொடுப்பனவு மற்றும் அளவீட்டு கட்டணங்களாக மொத்தம் ரூபா.1,564,617 தொகை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அதன் உரித்து மற்றும் கொஹாகொடையில் அமைந்துள்ள காணியும் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | தலைமை செயலாளருக்கு தொடர்புபடுத்தப்பட்டு உள்ளதுடன் பதில் கிடைத்ததன் பின்னர் கையேற்பதாக. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரித்தினைக் கையேற்க வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்த கட்டளை 83.1 பிரகாரம் 2018 முதல் 2023 வகையான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 1305 கட்டிட விண்ணப்பங்களுக்கு இடையே நிர்மாணிக்கப்பட்ட 1159 கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு காலநீடிப்பு செய்வதற்கும் நினைவூட்டல்கள் மேற்கொள்ளப்படுவதாக. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 17,649,179 பெறுமதியான பெக்கோ இயந்திரம் ஒன்று, ரூபா 340,000 கூட்டுப்பெறுமதியான 02 டிராக்டர் டேலர்கள் பெறுமதி இனங்காணப்படாதிருந்த டாக்டர் டேலர் ஒன்று பெறுமதி இனங்காணப்படாத கட்டிடம் ஒன்றும் காணியொன்றும் 03 ஆண்டு முதல் 24 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விளைவற்று அல்லது குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்களை ஏலத்தில் விற்பதற்கும் கையேற்கப்படாத சொத்துக்களை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை திருத்தம் செய்வதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு மற்றும் உரித்து கையேற்கப்படாத சொத்துக்களின் உரித்தை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 185,091 ஆன அசையாத நீர் தாங்கி இருப்போன்று 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டது. | குழு பரிந்துரைகளை எதிர்காலத்தில் செயல்படுத்துவதாக. | குழு பரிந்துரைகளை ஏற்படுத்தி சரி செய்யப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி இளங்காணப்படாத 02 மயான பூமிகள் மற்றும் முன்னைய ஆண்டுகளில் சபையால் ரூபா 24,530,816 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் கூடிய 10 காணிப் பகுதிகளின் உரிமையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரித்து கையேற்கப்பட வேண்டும். |

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆட்சர்ப்பு நடைமுறை இன்றி மற்றும் நியமனக் கடிதம் ஒன்று வழங்காமல் சபைக்கு உரிய முன்பள்ளி பாடசாலைக்காக இரண்டு உதவியாளர் 2022 ஜுலை முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2022 ஜுலை முதல் 2024 திசெம்பர் வரை ரூபா 1,645,516 ஆன சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நியமனக் கடிதம் வழங்கப்படவில்லை வழங்கப்படவில்லை என்பதாக. | முறையான நியமனக் கடிதம் ஒன்றும் கடமை கையளிப்பு அடிப்படையின் பேரில் சம்பளம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 12 பதவிகளில் 14 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 20 மிகைகளும் காணப்பட்டன. | உயர் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து பொது மக்கள் சேவைகளை செயற்திறனாக பேணிச் வேண்டும. |
| (ஆ) | 2015 - 2021 காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஓய்வுபெற்றவர்களிடமிருந்தும் ரூபா 107,392 ஆன கடன் மீதி ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்து கொள்வதாக. | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிட வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக முறையாக | கழிவுகளை வெளியேற்ற நடைமுறையொன்று இல்லையென்பதாக. | சிக்கல்களை தீர்வு செய்து பொது மக்கள் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குழிகளை உரிய காலப் பகுதியில் சுத்திகரிப்பதற்கும் வெறுமையாக்கு வதற்கும் முடியுமான வகையில் கலிவண்டி சேவை ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருக்க வில்லை. | | |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவருத்திச் சட்டத்தின் விதிகளின் படி, சபையால் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையாளம் கண்டிருந்த போதிலும், அவற்றை அடைய நடவடிக்கை எடுக்கவில்லை. | அபிமாணமாக நிகறைவேற்ற முன்னுரிமை அளிப்பதாகவும். | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |